**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை – ஆகஸ்ட் – 2022**
**A061 நாட்டுப்புறவியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாட்டுப்புறப் பாடல்களின் தனித்தன்மைகளுள் இரண்டனைக் குறிப்பிடுக.
2. விடுகதைகளின் வகைகள் யாவை?
3. நாட்டார் யார்?
4. நாட்டுப்புற இலக்கியத்தின் தனிச்சிறப்புகள் யாவை?
5. கதைப்பாடல்களில் பின்பற்றப்படும் மரபுகளைக் குறிப்பிடுக.
6. சாதியச் சிக்கல்களை முன்வைத்து எழுந்த கதைப்பாடல் இரண்டினைக் குறிப்பிடுக.
7. சமுதாயம்–வரையறுக்க.
8. அவையடக்கம் பாடப்படுவதன் நோக்கம் என்ன?
9. தோற்றக் கதை என்றால் என்ன?
10. பிசி, பிதிர் ஆகிய சொற்கள் சுட்டுவது என்ன?
11. தமிழில் தொகுக்கப்பெற்ற முதல் விடுகதை நூல் எது?
12. சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களை வெளிப்படுத்துபவை யாவை?
13. பச்சை குத்துவதற்கான பசையை எவ்வாறு தயாரிக்கின்றனர்?
14. வீணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. சேனை தொடுதல் என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. நாட்டுப்புற மக்களின் கட்டடக்கலைத் திறனை இயம்புக.
2. நாட்டுப்புற மக்களின் மருத்துவ அறிவு குறித்து விளக்குக.
3. புராண கதைகளில் ஆண் பெண் உறவுநிலை குறித்து விளக்குக.
4. காதல் பாடல்களின் மொழிநடையைப் பற்றி எழுது.
5. கணக்கு விடுகதையை விளக்கிச் சான்று தருக.
6. வளர்ச்சி நிலைப்பாடல்கள் – குறிப்பு வரைக.
7. நாட்டுப்புற மகளிர் விளையாட்டுகளைப் பற்றி விளம்புக.
8. முளைப்பாரி சடங்கையும் அதன் நோக்கத்தையும் விளக்குக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) முத்துப்பாட்டன் கதை குறித்து விளக்கியுரைக்க.

   (அல்லது)

   (ஆ) நாட்டுப்புறவியல் கோட்பாடுகளை விளக்குக.

2. (அ) நாட்டுப்புறக்கதைகளின் வகைகளைக் கூறி விளக்குக.

   (அல்லது)

   (ஆ) வேளாண்மை தொழிற்பாடல்கள் வழி உழவர்களின் வாழ்வியலை வரையறுத்துரைக்க.

3. (அ) பழமொழிகளில் காணப்படும் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) நாட்டுப்புறக் கைவினைக் கலைகளின் வகைகப்பாடு தனித்துவம் குறித்து எடுத்துரைக்க.

***